மாலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை 30.11.2023 அதிர்வு 122

## ஜனாதிபதி ரணில் டுபாய்க்குப் பயணம்

( கே.பாரதி )

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகளின் 28 ஆவது காலநிலை மாற்ற மாநாட்டில் (ஊமீ 28) கலந்து கொள்வதற்காக டுபாய்க்குப் புறப்பட்டார்.

04

### ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதா?

# உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவு

### இப்போது அவசரப்பட மாட்டேன் என்கின்றார் ரணில்

### விமலின் கருத்தைத் தூக்கி வீசுங்கள் என்றும் பதிலடி



- சுடர் திலீபன் -

"நான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவை எடுப்பேன். அது குறித்து இப்போது அவசரப்பட மாட்டேன்."

04

# வவுனியாவில் வயோதிபத் தம்பதி கொடூரமாக வெட்டிப் படுகொலை!

### பல கோணங்களில் பொலிஸார் விசாரணை





(கி.வசந்தரூபன்)

வவுனியா, செட்டிகுளம் நகரப் பகுதியில் இன்று கணவனும் மனைவியும் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

04

## மின்சாரம் தாக்கி தந்தையும் மகளும் பரிதாப உயிரிழப்பு

### மலையகத்தில் சோகம்



(கே.பாரதி)

மின்சாரம் தாக்கித் தந்தையும், மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம்

04

## களனி கங்கைக்குள் தவறி விழுந்த பொலிஸ் உத்தியோகத்தர் மாயம்!

கொழும்பு, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் எச். ஜயலத் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் களனி கங்கையில் தவறி விழுந்து காணாமல்போயுள்ளார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

கொழும்பு விக்டோரியா பாலத்தில்

04

# வவுனியாவில் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகச் சனியன்று கண்டனப் போராட்டம்

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகக் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் வவுனியா ஊடக அமையத்தினர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்

04








# ‘யாழில் மலையகத்தை உணர்வோம்’ நிகழ்வு இன்று முதல் ஞாயிறு வரை

மலையகம் -200 ஒட்டி, ‘யாழில் மலையகத்தை உணர்வோம்’ என்ற தொனிப்பொருளிலான நிகழ்வு இன்று ஆரப்பமானது.

இன்று காலை 9:30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஆரம்பமாகியுள்ள இந்த நிகழ்வு எதிர்வரும் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெற இருக்கிறது.

யாழ்ப்பாணம் சிவில் அமைப்புகள், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வின் இன்றைய ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பளர் ஜோன் குயின்ரஸ், முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு இடம்பெறும் மண்டபத்தில் மலையக மக்களின் கடந்தகால மற்றும் தற்போதைய வாழ்வியலை உணர்த்தும் கண்காட்சியும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் தொலைபேசி திருடி வந்தவர் கைது!

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் கடந்த சில நாள்களாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் நோயாளர்களை பார்வையிட வருபவர்களின் தொலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் மதுரபெரும தலைமையிலான அணியினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

தொலைபேசி திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நெல்லியடி பகுதியைச் சேர்ந்த ஒருவரும் திருட்டு தொலைபேசியை வாங்கிய குற்றச்சாட்டில் ஊர்காவற்துறைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் யாழ் குற்றத்தடுப்பு பிரிவின ரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

வைத்தியசாலையில் கடந்த மூன்று நாள்களுக்குள் திருடப்பட்ட பெறுமதியான தொலைபேசிகளையும் அவர்கள் மீட்டுள்ளனர்.

அண்மைய நாள்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தொலைபேசிகளை யாராவது தொலைத்திருந்தால் அவர்களை நேரடியாக வந்து உரிய ஆவணங்களை – ஆதாரங்களை – காட்டி திருட்டுப் போன தொலைபேசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என குற்றத்தடுப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர்

# அம்பாறையில் அடைமழை! எங்கும் ஒரே வெள்ளக்காடு!

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருகிறது. இதனால் பெரும்பாலான வயல் வெளிகள் வெள்ளக் காடாக காட்சிளிக்கின்றன.

வீதியெங்கும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. காரைதீவு பிரதேசத்தில் வயல் நிலங்கள் பூரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தாழ் நிலங்களில் குடியிருப்பவர்களின் நலன் கருதி அடைபட்டுள்ள தோணாக்களை துப்புரவு செய்யும் பணிகள் உள்ளூராட்சி சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தாழ் நிலங்களில் அதிகம் மழை நீர் தேங்கி நிற்பதால் மக்களின் நாளாந்த வாழ்வியலில் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து இடம் பெயர வைத்துள்ளது.

கூடவே பிள்ளைகளின் கல்வியும் குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது.

வயல் மற்றும் கடற்றொழிலுக்கு பொதுவாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேசத்தில் மழை நீர் தேங்கி நிற்காமலும் நுளம்புகள் பெருகாமலும் தோணாக்கள் கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர் கடலுக்குச் சென்றடையும் வகையில் சுத்தம் செய்யப்படுகிறது.



# யாழ். காங்கேசன்துறைப் பகுதியில் இரும்புக்கு உடைக்கப்படும் தூண்கள்

(எஸ்.நிதர்ஸன்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான சிமெந்துத் தூண்களை உடைத்து அவற்றின் கம்பிகளைத் திருடர்கள் திருடிச் செல்கின்றனர்.

இது தொடர்பில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினர் மற்றும் , காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் இல்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அருகில் உள்ள துறைமுக அதிகார சபையினருக்கு சொந்தமான காணியில் பெரியளவிலான சிமெந்துத் தூண்கள் காணப்படுகின்றன. அவை துறைமுக அபிவிருத்திக்காக கொண்டு வரப்பட்டு இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட அந்த பிரதேசங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டு இருந்தனர். தற்போது இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறிய நிலையில் அவ்விடங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

அந்த நிலையில் துறைமுக அதிகார சபையின் காணிக்குள் அத்துமீறி நுழையும் திருடர்கள் அங்கு காணப்படும் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான தூண்களை உடைத்துக் கம்பிகளைக் களவாடிச் செல்கின்றனர்.

பெறுமதியான பல தூண்கள் காணப்படும் நிலையில் அவற்றை இரும்புக்காக உடைத்துச் சேதப்படுத்தி இரும்புகளை திருடிச் செல்கின்றனர்.

இது தொடர்பில் ஊர் மக்களால் காங்கேசன்துறை பொலிஸார் , வலிகாமம் வடக்கு பிரதேச சபையினருக்கு அறிவித்தும் நடவடிக்கை இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உப அலுவலகம் , இரும்பு திருட்டு நடைபெறும் காணிக்கு அருகில் அமைந்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் ஞாபகார்த்தமாக மாபெரும் அன்னதானம்!

மேல்மருவத்தூர் அருட்திரு பங்காரு அடிகளார் இறை சமாதி நிலையடைந்த 45 ஆவது நாளை முன்னிட்டு மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பணத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 03 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை யாழ். நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் காலாசார மண்டபத்தில் காலை 9 மணிமுதல் ,ந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அன்னதான நிகழ்வை மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு



அறப்பணி மையத்தின் இலங்கை கிளை ஏற்பாடு செய்துள்ளது.

சுவிஸ் பேர்ன் மன்ற சக்திகள், லண்டன் ஈஸ்ற்ஹாம் மன்ற சக்திகளும் லண்டன் ஓம்சக்தி அம்மா காப்பகம் சக்திகளும் மற்றும் ஆஸ்திரேலியா குயின்ஸ்லான்ட் சக்திகள் இதற்கு நிதி அனுசரணை வழங்கியுள்ளன.

அன்னதான நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு வேண்டுகிறோம் என மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் அழைப்பு விடுத்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வவுனியாவில் வயோதிப...

செட்டிகுளம் பிரதான வீதியில் இந்தத் தம்பதியினரின் மகன் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரும் நிலையில் அதற்குப் பின்னால் உள்ள தங்கும் இடத்தில் மேற்படி தம்பதியினர் வசித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று இரவு வழமைபோல் அவர்களது மகன் வியாபார நிலையத்தை மூடிவிட்டு அண்மையில் உள்ள தனது வீட்டுக்குச் சென்ற போது தம்பதியினர் வியாபார நிலையத்துக்குப் பின்பாகவுள்ள தங்கும் இடத்தில் உறங்கச் சென்றனர்.

இன்று காலை வியாபார நிலையத்தைத் திறப்பதற்காக வருகை தந்த மகன் தனது தாயும் தந்தையும் வெட்டுக்காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்த நிலையில் கிடந்தமையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

சம்பவம் தொடர்பாகச் செட்டிகுளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்தச் சம்பவத்தில் செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 72 வயதான பசுபதி வர்ணகுலசிங்கம் என்ற வயோதிபரும், அவரது மனைவியான 68 வயதான கனகலட்சுமி என்ற வயோதிபப் பெண்ணுமே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது சடலங்களுக்கு அருகில் மூன்று கத்திகள் இரத்தங்களுடன் மீட்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் அந்தக் கத்திகளாலேயே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 5 பவுண் பெறுமதிமிக்க தங்க நகை ஒன்றும் காணாமல் போயுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் படுகொலை திருட்டில் ஈடுபடும்போது இடம்பெற்றதா அல்லது வியாபாரப் போட்டி காரணமாக நடைபெற்றதா அல்லது தனிப்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்றதா போன்ற கோணங்களில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

### ஜனாதிபதி ரணில்...

நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து டுபாய்க்கு அவர் புறப்பட்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு (COP 28) இன்று (நவம்பர் 30) முதல் டிசம்பர் 12 வரை டுபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் உலகத் தலைவர்கள், அரச பிரதிநிதிகள், சூழலியலாளர்கள், புத்துஜீவிகள் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெறும்.

அதில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சில அமைச்சர்கள் மற்றும் இலங்கை இளைஞர் சேவை மன்றத்தின் ஒரு குழுவும் தூதுக் குழுவாகச் சென்றுள்ளனர்.

ஜனாதிபதியுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நிதிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனும் பயணமானார்.

---

### களனி கங்கைக்குள்...

நடந்து சென்று கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது கையடக்கத் தொலைபேசி மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது தொடர்பான ஆவணங்கள் என்பன பாலத்துக்கு அருகில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் காணாமல்போனவரைத் தேடும் பணியில் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

---

### மின்சாரம் தாக்கி...

கம்பளை, கொத்மலை – கொடகேபிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

32 வயதான தந்தையும், 2 வயது 10 மாதங்கள் நிரம்பிய மகளுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை இந்தச் சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலங்கள் கம்பளை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

தமது தோட்டத்துக்குப் போடப்பட்டிருந்த மின்வேலியில் சிக்குண்டே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கம்பளையில் இருந்து சற்றுத் தொலைவிலேயே கொத்மலை டேம் பகுதி அமைந்துள்ளது. அதனைச் சூழவுள்ள பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

---

### வவுனியாவில்...

குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளும், அவர்களை அச்சுறுத்திப் பழிவாங்கும் செயற்பாடுகளும் அரச இயந்திரங்களான பொலிஸாராலும், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத் துறையினராலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாகவே, வடக்கு – கிழக்கில் ஊடகவியலாளர்கள் தொடர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதுடன், வவுனியாவில் செய்தி சேகரில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன், ஊடகவியலாளர் பரமேஸ்வரன் கார்த்தீபன் மீதும் பொலிஸாரால் பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, ஊடக அடக்கு முறைகளுக்கு எதிராகவும், ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கோரியும் வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாகக் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே, ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஊடகவியலாளர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு போராட்டத்தை வலுப்படுத்துமாறு கோருகின்றோம்.” – என்றுள்ளது.

---

### உரிய நேரத்தில்...

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

“ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவது தொடர்பில் விமல் வீரவன்ச தீர்மானிக்க முடியாது. அவரின் கருத்தைத் தூக்கி வீசுங்கள்” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்றும், ஏதேனும் சர்வதேச அமைப்பொன்றில் முக்கிய பதவியொன்றைப் பெற்று ஓய்வுகாலத்தைக் கழிக்கவே ரணில் விக்கிரமசிங்க முற்படுவார் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கடந்த இரு நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

விமலின் இந்தக் கருத்து தொடர்பில் நேற்று ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி நடத்திய கலந்துரையாடலின்போது பேசப்பட்டது. இதன்போதே ஜனாதிபதி மேற்படி பதிலை வழங்கினார் என்று அந்த அமைச்சர் கூறினார்.

“ஆளும் கட்சியிலிருந்து எதிரணிப் பக்கம் பாய்ந்தவர்களும், எதிர்க்கட்சிகளில் இருப்பவர்களும் எனது அரசியல் பயணத்தை ஏதோவொரு வழியில் முடக்க முயற்சிக்கின்றனர். அவர்களால் எனது அரசியல் பயணத்தை ஒருபோதும் முடக்க முடியாது. நீங்களும் (ஆளும் கட்சியின் முக்கியஸ்தார்கள்) அவர்களின் பொறிக்குள் சிக்கிவிடாதீர்கள். அரசியலில் நான் தொடர்ந்து இருப்பதா? இல்லையா? என நான்தான் முடிவு எடுப்பேன்.” – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டார் என்றும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# மட்டு. புனித மிக்கேல் கல்லூரிக்கு தென்னாபிரிக்க தூதர் விஜயம்!

(பழுவூரான்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானது அழைப்பின் பேரில் மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலைக்கு தென்னாபிரிக்க நாட்டுக்கான தூதர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார். 150 வருட பழமைவாய்ந்த பாடசாலை அவர் பார்வையிட்டார்.

இதன்போது புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் ஏ.வீ.ஜோசப் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வின் போதுதென் ஆபிரிக்க தூதர் சாண்டிலே எட்வின் ஷால்க்கைக் கௌரவிக்கும் வகையில் நினைவுச் சின்னம் வழங்கப் பட்டது. பாடசாலையில் 150 வருட வரலாற்றை எடுத்துக் கூறும் நூற்றாண்டு விழா நூலொன்றும் இதன்போது தூதருக்கு வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வுக்கு விசேட அதிதியாகக் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தவிசாளர் ஏ.பீ.மதனவாசன் மற்றும் தூதரின் செயலாளர்,

மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் வி.பிரதீபன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருது நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு!

(ஏ.எஸ்.மௌலானா)

கட்டார் நாட்டில் பணியாற்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த பொறியியலாளர் எச்.எம். பர்ஸாத் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன்கருதி சாய்ந்தமருது பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவற்றை செவ்வாய்க்கிழமை பிற்பகல் அவரது சார்பில் எம். சித்தி நிபாரா, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மியிடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி, கணக்காளர் கே.எம்.றியாஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

தூரநோக்கு சிந்தனையுடன் மாணவர் நலன் கருதி மிகவும் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தமைக்காக பொறியியலாளர் எச்.எம். பர்ஸாதுக்கு மாநகர சபை சார்பில் மிகுந்த நன்றியும் வாழ்த்தும் தெரிவிப்பதாகக் கூறிய ஆணையாளர் பாராட்டுப் பத்திரம் ஒன்றையும் வழங்கி வைத்தார்.





## அரச பொதுச் சேவைகள் சங்கத்தின் அங்கத்துவ மாதம் ஆரம்பமானது

(அஸ்ஹர் ஆதம்.)

இலங்கை அரச பொதுச் சேவைகள் சங்கத்தின் அங்கத்துவ மாதம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழிற்சங்க உப தலைவர் கே. திருமாறன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது

இதற்கு அமைய புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் அங்கத்தவர்களின் தொழில் மற்றும் தாபன ரீதியான பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வின்போது புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், அவர்களுக்கான அங்கத்துவ பத்திரங்களும் வழங்கப்பட்டன

அத்துடன் தொழிற்சங்க அங்கத்தவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்ட உப தலைவர் கே.திருமாறன் அது குறித்து உடன் செயல்பட்டு தீர்வைப் பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளும் தாய் சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் மரத்தில் வேதாளம்

“ஆட்சிக் கட்டமைப்பில் அரசாங்கத்தின் ஒரு பிரிவு அதன் அதிகாரங்களை மீறாமல் இருப்பதை உறுதி செய்யும் அதிகார வரையறை அல்லது அதிகாரப் பிரிப்பு இல்லாவிட்டால் எந்த நாட்டையும் ஜனநாயக நாடு என்று வர்ணிக்க முடியாது.”

- இப்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் தீபிகா உடகம தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்த கருத்து நோக்கற்பாலது.

“அரசாங்கத்தின் மூன்று பிரிவுகள், அதாவது, நிறைவேற்றதிகாரம் (ஜனாதிபதி), சட்டமன்றம் (நாடாளுமன்றம்) மற்றும் நீதித்துறை ஆகியவை சமநிலையை ஏற்படுத்துவதற்கு ஒருவரையொருவர் கண்காணிக்க வேண்டும். 1978 அரசமைப்பு, நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை மையப்படுத்தியது. நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு வரம்புகளை வைப்பது மற்றும் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளுக்கு இடையில் சமநிலையை எவ்வாறு அடைவது என்பது அன்றிலிருந்து கேள்வியாக உள்ளது” - என்று அவர் கூறினார்.

இலங்கை அரசியலின் துன்பியல் நிலைமை என்னவென்றால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய காலத்திலிருந்து கடந்த 45 வருடங்களாக அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் அனைவருமே தங்கள் விருப்புக்கும், தேவைக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ப தங்கள் அதிகாரத்தை - ஜனாதிபதி பதவியின் வரையறைகளை - தம் இஷ்டப்படி மாற்றி அமைத்தனர் என்பதுதான்.

அத்தகைய அரசமைப்பு மாற்றங்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு - இணக்கம் - தேவை என்ற மட்டுப்படுத்தல்கள் இருந்த போதும், அத்தகைய அரசியல் கோமாளித் தனங்களுக்கு அவ்வப்போது இருந்த நாடாளுமன்றங்கள் சோரம் போய் அந்த மாற்றங்களுக்குத் துணை போயின.

இதில் பெரும் வேடிக்கை என்னவென்றால், ஒரே நாடாளுமன்றம் ஒன்றுக்கொன்று முரணான - தலைகீழான - அதிகார மட்டுப்படுத்துதல் தொடர்பான அரசமைப்புத் திருத்தங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அங்கீகாரம் அளித்தமைதான்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளை சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக இருந்த போது கொண்டு வந்தார்.

அவர் போய் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி என்ற கையூட்டை வழங்கி, மீண்டும் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தும் 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்.

அதன் பின்னர் நல்லாட்சி காலத்தில் - 2015 இல் - 19ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டி மட்டுப்படுத்தும் ஏற்பாடு ஜனாதிபதி மைத்திரிபாலவினதும், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் இணக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது.

மீண்டும் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து தமது நிறைவேற்றதிகாரத்தைக் கட்டுமட்டு மில்லாத அளவுக்குப் பெருக்கினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

குறுகிய காலத்தில் அவர் நாட்டு மக்களினால் துரத்தப்பட, அந்த இடத்துக்கு - அதிகாரத்துக்கு - வந்த ரணில் விக்கிரமசிங்க, வந்த புதிதில் நல்ல பிள்ளை மாதிரி ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தை ஓரளவுக்கு மட்டுப்படுத்தும் 22 ஆம் திருத்தத்திற்கு இணங்கி, அதை நடைமுறைப் படுத்தினார்.

அதன் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் - கட்டுப்படுத்தும் - கட்டமைப்புத்தான் அரசமைப்புக் கவுன்ஸில்.

அந்த அரசமைப்புக் கவுன்ஸில் ஜனாதிபதியான தனது விருப்பத்திற்கு இணங்கி - இசைந்து - செயல்படவில்லை என்பதனால் அந்த அரசமைப்புக் கவுன்ஸிலே நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் தனக்குக் கீழ்தான் என்று புதுக்கதை விடுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கங்க.

அதாவது, தமது நிறைவேற்றதிகாரத்தைக் கட்டுமட்டுமில்லாமல் பெருக்குவதற்காக மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல அதிகாரக் குவிப்பை மேலும் உறுதிப்படுத்த முயல்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

கோட்டாவிற்கு நேர்ந்த கதியை அவர் மறந்ததினால் வந்த துரதிர்ஷ்ட நிலைமைதான் இது.

## உள்ளூர் உற்பத்திகளின் விற்பனையும் கண்காட்சியும்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

இந்த விற்பனை மற்றும் கண் காட்சி நிகழ்வின் போது பிரதேச செயலக பிரிவின் உள்ளூர் உற்பத்தியாளர்களால் செய்யப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் கணக்காளர் , உதவி திட்ட பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்,சமுர்த்தி முகாமை யாளர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர் .

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்”

-தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி)





# திமோர் - லெஸ்ட்டே விருது பெற்றுள்ளார் இலங்கை ஊடகவியலாளர் ப்ரெடி கமகே!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் ஊடகவியலாளரும் மனித உரிமைப் செயற்பாட்டாளருமான ஃப்ரெடி கமகேவுக்கு நவம்பர் மாதம் 27ஆம் திகதி கிழக்குத் தீமோர் நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் ரமோஸ் ஹோர்டாவினாவால் திமோர் - லெஸ்டே எனும் கௌரவம் வழங்கப் பட்டுள்ளது.

கிழக்குத் தீமோரின் சுதந்திரத்துக்கான பிரச்சாரத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பை பாராட்டும் முகமாக இந்தக் கௌரவம் அமைந்துள்ளது.

வேறொரு நாட்டின் பத்திரிகையாளர் ஒருவர் கிழக்கு திமோரின் தலைநகரில் பாராட்டப்படுவது இதுவே முதல் தடவையாகும். சமூக நீதிக்காக இடைவிடாத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ப்ரெடி கமகேவுக்கு மட்டுமின்றிஇ இதுபோன்ற பலருக்கும் கிடைத்த சிறப்பு மரியாதையாக இது கருதப்படுகிறது.

கமகே 1988-89இல் தனது உயிருக்கு அச்சுறுத்தல் காரணமாக பிலிப்பைன்ஸில் அரசியல் தஞ்சம் கோரிய போது திமோர் - லெஸ்டேவின் சுதந்திரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

1979- 81 காலப் பகுதியில்இ நீர்கொழும்பு புனித மரியாள் உயர்தரப் பாடசாலையில் உயர்தரப் பாடசாலை மாணவனாக இருந்தபோது, வணக்கத்துக்கு உரிய சரத் இத்தமல்கொடவுடன் கைகோர்த்து நீர்கொழும்பு சனசமூக நிலையத்தை நிறுவி அதனை முன்னெடுத்துச் சென்றார். தனது பள்ளி வாழ்க்கையில் கூடஇ தாழ்த்தப் பட்ட மக்களின் சுதந்திரத்துக்காகத் தனது நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டார்.

வாக்காளர் உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்ட ப்ரெடிஇ வெளிவாரியாக இளங்கலைப் பட்டதாரியானார்.

அத்துடன், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேசக் கற்கைகள் நிறுவகத்தில் சர்வதேச உறவுகளுக்கான உயர் டிப்ளோமாவும் பெற்றார்.

கொள்கைப் பிரச்சினைகளின் அடிப்படையில் ஜனவபோத கேந்திரா என்ற நிறுவனத்தில் முழுநேர சேவையில் இருந்து விலகிய போதும் மக்கள் போராட்டத்தைப் பிரேடி கைவிடவில்லை. அதன் பின்னர், 'மூன்றாம் உலக நண்பர்கள்' என்ற அமைப்பை உருவாக்கி பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.



இதன் காரணமாக, அவர் மரண அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது 88-89 பயங்கரவாதச் சூழல் காரணமாக தனது உயிரைக் காப்பாற்ற அரசியல் அகதியாக பிலிப்பைன்ஸில் வாழ வேண்டியிருந்தது.

அந்தக் காலகட்டத்தில்தான் கிழக்குத் திமோரின் சுதந்திரப் போராட்டத்தில் அதிக பங்களிப்பை வழங்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பின்னர் இலங்கை வந்த அவர் நீதிக்கான போராட்டத்தைத் தொடர்ந்தார்.

இதன் காரணமாகஇ ஒருமுறை பிலிப்பைன்ஸில் உள்ள மணிலா விமான நிலையத்தில் அவர் நாட்டுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு, அதிகாரிகளால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இந்த நிலையில், விமான நிலையத்தில் போராட்டம் நடத்த பிரட்டி அஞ்சவில்லை. இது குறித்து தேசிய நாளிதழ்களில் பல புகைப்பட அறிக்கைகள் வெளியாகியிருந்தன.

நீர்கொழும்பை மையமாகக் கொண்ட உள்ளூர் செய்தித்தாளான 'மீபுரா' வைத் தொடங்கிஇ மிகக் குறைந்த வசதிகளின் கீழ் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாளாக மாற்றுவதற்கு உழைத்தார். இன்றும் மீபுரா இணையத்தளம் ஒரு தனிப் பாத்திரத்தை வகிக்கிறது.

நீர்கொழும்பு போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும் ஊழல் அரசியல்வாதிகளின் உண்மை முகத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதற்கு பிரேடியைப் போல் கடுமையாக உழைத்த சிவில் சமூக ஆர்வலர் மற்றும் ஊடகவியலாளர் வேறு எவரும் இல்லை. இதன் காரணமாக, நீர்கொழும்பின் குண்டர் அரசியலுக்கு அவர் பலியாகி வைத்தியசாலைக்குக் கூட செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அவர் தனது போராட்டத்தைக் கைவிடவில்லை.

ஒரு ஊடகவியலாளர் என்ற வகையில்இ கமகே 'மீபுரா' பிராந்திய பத்திரிகையைத் தேசிய தரத்துக்கு உயர்த்துவதில் முக்கிய பங்காற்றினார். இன்றும் அது இணைய வடிவில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆத்துடன்இ தொழில்முறை வலை ஊடகவியலாளர்கள் சங்கத்தை நிறுவியவர் மற்றும் இணைய ஊடகத்திற்கான நெறிமுறைகளை அறிமுகப் படுத்தியவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ‘ஜாடி’ மூலம் மீன்களைப் பதப்படுத்தி நீண்ட காலம் பயன்படுத்தும் பயிற்சி

(மன்னார் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டம் இரணை தீவு பகுதி மீனவ பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட மீனவ பெண்களுக்கு, மழை காலங்களில் மீனை ஜாடி மூலம் பதப்படுத்தி நீண்ட காலம் பயன்படுத்தும் செயற்றிட்ட பயிற்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (28) வழங்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் மீன்களின் விலை குறைவடைந்து காணப்படுகிறது. மீனை கருவாடு மற்றும் ஏனைய முறைகளில் பதனிட முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் சில நேரங்களில் தமது வீட்டுத் தேவைக்காக கூட மீனை பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் ஏற்படுகிறது.

இந்த நிலையில் மீனை எவ்வித இரசாயன பதார்த்தங்களும் பயன்படுத்தாது ‘ஜாடி’ முறையில் பதப்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) ஏற்பாட்டில், நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் கிளிநொச்சி மாவட்டம் இரணை தீவு இரணைமாதா நகர் மீனவ கூட்டுறவு சங்க கட்டடத்தில் நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது இரணைமாதா நகர்இ அன்பு புரம்இ முழங்காவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 35 மீனவ பெண்கள் கலந்து கொண்டு குறித்த பயிற்சியை நிறைவு செய்தனர்.

பயிற்சி மற்றும் செயல்முறையில் மன்னார் மாவட்ட முன்னால் கடற்றொழில் உதவி பணிப்பாளர் ஏ. மெராண்டா, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மன்னார் மாவட்ட பிரதி பணிப்பாளர் ஜே.எம்.ஏ.லெம்பேட், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி அலுவலர் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சியின் போது மீன்களைக் கொள்வனவு செய்து சுத்தப்படுத்தி எவ்வித ரசாயன பொருள்களும் இன்றி உப்பு மற்றும் கொருக்கா புளி ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி ‘ஜாடி’ முறையில் மீன்களை பதப்படுத்தி நீண்ட நாள்களுக்கு பயன்படுத்துவது மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற செய்முறை பயிற்சியும் வழங்கப்பட்டன.






# பாலமுனை உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட வீரர்களுக்கான ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பாதணிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டு கழக வீரர்களை உதைபந்தாட்ட துறையிலும் ஏனைய விளையாட்டு துறையிலும் ஊக்குவிக்கும் வகையில் கழகத்தின் உப தலைவரும் தொழிலதிபருமான எச்.எம்.அன்ஸாரின் பங்களிப்புடன் பாதணிகளும், விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது கழகத்தின் தலைவர் எம்.எச்.நிசார்தீன் தலைமையில் நிர்வாக சபை உறுப்பினர்கள் , கழக ஆலோசகர்கள் மற்றும் உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இடம் பெற்றது .



# சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு திருகோணமலை மாணவர் மட்டத்தில்

(எஸ்.கீதபொன்கலன்)

நாடெங்கும் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகளிலிருந்து, சிறுவர்களைப் பாதுகாப்பதை பிரதான நோக்காகக் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால், திருகோணமலை மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட 36 பாடசாலைகளின் சிரேஷ்ட மாணவர் தலைவர்களுக்கான ஒரு நாள் அறிவூட்டல் செயலமர்வு, மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கல்வி அமைச்சுடன் இணைந்து நாடெங்கிலும் நடத்தி வரும் செயலமர்வின் திருகோணமலை மாவட்டத்துக்கான செயலமர்வில் அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் தகவல் துறைப் பணிப்பாளர் திருமதி. சனிக்கா மலலகொட மாணவர்களுக்கான விசேட உரையை ஆற்றினார்.




சிரேஷ்ட மாணவர் தலைவர்களுக்கான 'சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டம்' என்ற தேசிய நிகழ்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாணவர் தலைவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

பாடசாலையினுள் சிறுவர் துஷ்பிரயோகம் நடப்பதைத் தடுப்பதற்கும், குறைப்பதற்குமான செயற்பாடுகளிலும், சிறுவர் நேயமுடன் கூடிய பாதுகாப்பான சூழலை பாடசாலையினுள் உருவாக்குதலிலும் மாணவர் தலைவர்களின் முழுமையான பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் மேற்படி விசேட செயற்றிட்டம் வடிவ மைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் தகவல்துறை உதவிப் பணிப்பாளர் திருமதி.லக்சிக்கா, மாவட்ட சிறுவர் நலத்துறை அலுவலர் சம்சிட் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.



# பொதிகளில் மிளகாய்ச் செய்கை; காரைதீவில் அறிமுக நிகழ்வு!

(வி.ரி.சகாதேவராஜா)

பொதிகளில் மிளகாய்ச் செய்கை செய்யும் முறைமையை ஊக்குவிக்கும் வகையில் காரைதீவு விவசாய போதனாசிரியர் பிரிவில் கூட்டு அறிமுகம் இடம் பெற்றது.

காரைதீவு விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் தொழில்நுட்ப உதவியாளர் திருமதி எஸ்.நிலக்க்ஷியின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன், கௌரவ அதிதியாக விவசாய போதனாசிரியர் ஜே.எம். பாஸில் ஆகியோர் கலந்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்–

பொதிப் பயிர்ச் செய்கையானது நிலம் அற்றவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எமது பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளம் கடும் வறட்சி என்பவற்றால் மாறி மாறி வரும் அனர்த்தங்களால் பயிர் செய்கை பாதிக்கப்படுகிறது. இத் தகைய பாதிப்பைக் குறைக்கும் வகையிலும் நிலமில்லாத பிரச்சினை யைத் தீர்க்கும் வகையிலும் இந்தப் பொதிப் பயிர் செய்கை அறிமுகப்படுத் தப்பட்டது.

குறிப்பாக நகர மாடி வீடுகளுக்கு ஏற்ற முறையாகவுமுள்ளது.

எனவே விவசாயிகள் இத்தகைய புதிய முறைகளையும் பின்பற்றி வாழ்வை வளமாக்கிக்கொள்ள வேண்டும்.– என்றார். விவசாயிகள் பங்கேற்ற இந் நிகழ்வின் இறுதியில் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.






# பத்து லட்சம் பேருக்கு விழிப்புணர்வும் பத்து லட்சம் மரக்கன்றுகள் நடலும்!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி அல்–அஸ்ரப் மஹா வித்தியாலய அதிபர் வீ. எம்.ஸம்ஸமின் வழிகாட்டலில் சம்மாந்துறை அல்–அர்ஷத் மகா வித்தியாலயத்தில் தரம்–07 இல் கல்வி பயின்று வரும் ஜலீல் பாத்திமா மின்ஹா எனும் மாணவியால் “காலநிலை மாற்றம்” எனும் தொனிப்பொருளில் பத்து லட்சம் பேருக்கான விழிப்புணர்வும், பத்து லட்சம் மரக்கன்றுகள் நடலும் திட்டத்தின் கீழ் மாவடிப்பள்ளி அல்–அஸ்ரப் மஹா வித்தியாலய காலை ஆராதனையின் போது மாணவர்கள் மத்தியில் உரையாற்றி பலரதும் கவனத்தை ஈர்த்தார்.



மாவடிப்பள்ளி அல்–அஸ்ரப் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல். றஜாப்தீன் நெறிப்படுத்தலில் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையின் அனைத்து கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியினரும் பங்கேற்று அந்த மாணவிக்கு மாலை சூடி வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.





# ஓய்வு பெறவுள்ள முதியோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்!

**(எஸ்.கீதபொன்கலன்)**

“ ஓய்வுக்கு முன்னர் ஆயத்தமாதல், செயற்றிறனான முதுமைப்பருவம்”எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

முதியோர்களுக்கான தேசிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் ,து நடைபெற்றது.

பட்டினமும் சூழலும், கிண்ணியா, மூதூர், தம்பலகாமம் பிரதேச செயல கங்களில் கடமையாற்றும் 50 தொடக்கம் 60 வயதுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அரச ஊழியர்கள் ஏதாவதொரு நாள் ஓய்வு பெற வேண்டும். அவர்களின் ஓய்வு காலத்தை பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் கொண்டு செல்ல இன்றிலிருந்து திட்டமிட வேண்டும். அதற்கு உடலாரோக்கியம் அவசியம். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் பெற்ற அறிவை உங்களது ஓய்வு காலத்தை திட்டமிடுவதற்கு ஒரு தொடக்க புள்ளியாக பயன்படுத்துங்கள் என்று நிகழ்வில் தலைமை உரையாற்றிய திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி கூறினார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ். குருகுலசூரிய, மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.இர்பான் திருகோணமலை பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடாதிபதி அனவர்தன், வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் நிரஞ்சன், மருத்துவ உத்தி யோகத்தர்களான திருமதி வைகலை, மோகனசந்திரன், திருமதி செனவிரத்ன மற்றும் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் ஆகியோர் கலந்து கொண் டனர்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882




# காசா போரில் இஸ்ரேலின் படிப்பினை; ஆப்கானில் அமெரிக்க கற்ற பாடம்!

■ஐங்கரன் விக்கினேஸ்வரா

(தற்போதய போரில் ஹமாஸை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நீண்ட முரண்பாடுகளை இஸ்ரேல் எதிர்கொள்கிறது. போரில் வெற்றிய டைந்தாலும் அது கடினமான சங் கடத்தை வருங்காலத்தில் எதிர்கொள் ளும் எனவும், மேலும் இந்த அவசர மான போரிலிருந்து பல அபாயம் உள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்)

ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வெற்றியடையலாம். ஹமாஸை அழித்ததின் பின், போரின் நீண்டகால வெற்றி என்பது அமைதி யான எதிர்காலத்தை உருவாக்க விரும்பும் பாலஸ்தீனியர்களுக்கு நில அதிகாரம் இஸ்ரேலால் அளிப்பதி லேயே தங்கி உள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கு அவர்களின் குறைந்தளவு நில ஆட்சி அதிகாரத்தை; கொடுக்க இஸ்ரேல் தயாராக இருக்க வேண்டும். நிச்சயமாக இஸ்ரேலின் இருப்பு என்பது, மேற்குக் கரையிலும் காஸாவிலும் ஒரு நட்புள்ள சக்தியை உருவாக்குவதிலேயே தங்கியுள்ளது.

2005 இல் காசாவில் இருந்து இஸ் ரேல் வெளியேறியதில் இருந்து, இது வரை நான்கு பெரிய மோதல்களைக் கண்டுள்ளது. 2008, 2014, 2021 மீண்டும் இப்போதய 2023 காசா சண்டையை இரண்டாம் உலகப் போருக்கு ஒப்பிட்டு எதிர்நோக்குவதாக இஸ்ரேல் அறிவித் துள்ளது.

தற்போதய போரில் ஹமாஸை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நீண்ட முரண்பாடுகளை இஸ்ரேல் எதிர்கொள்கிறது. போரில் வெற்றிய டைந்தாலும் அது கடினமான சங்க டத்தை வருங்காலத்தில் எதிர்கொள் ளும் எனவும், மேலும் இந்த அவசர மான போரிலிருந்து பல அபாயம் உள்ளது என்று இராணுவ ஆய்வா ளர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்கா, ஈராக் மற்றும் ஆப் கானிஸ்தான் மீது படையெடுத்து, இறுதியில் அதன் உள்நாட்டு அரசு களை மீண்டும் கட்டமைக்க முயன் றபோது பலத்த சிக்கலில் சிக்கியது. இஸ்ரேலியர்களுக்கு இங்கே இதே போன்ற பிரச்சினை உள்ளது என்று இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

### ஹமாஸை முடிவுக்கு கொண்டு வருதல்

இஸ்ரேல் ஹமாஸை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவந்து, அதில் வெற்றி பெற்றாலும், அதன் காசாவில் தலைமைத்துவத்தை மாற்றியமைப்பது மற்றும் காஸாவில் பாலஸ்தீனியர்க ளுக்கு சிறந்த எதிர்காலத்தை பிரதி நிதித்துவப் படுத்துவது என்பதை தெளிவாக இஸ்ரேல் வெளிப்படுத்தத் தவறியுள்ளது.

ஆயினும் பல இஸ்ரேலியர்கள் ஹமாஸை முடிவுக்குக் கொண்டு வருவதைப் பற்றி நினைப்பதற்கு அப்பால், காசாவில் ஒரு நிச்சயமற்ற எதிர்காலம் உள்ளது என்பதை அறிகின்றனர்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க நடவடிக்கையின் படையெ டுப்பு என்பு நீண்டகாலமாக; திட்ட மிடப்பட்டு இருந்தது. ஆனால் காசா போர் அவசரமான இஸ்ரேலின் போர் வெற்றிக்கு இராணுவ மூலோபாயத்தில் இராணுவ வல்லுநர்கள் தவறிழைத்த தாக கூறுகின்றனர்.

உண்மையில் 9/11 மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த போர்களில் இருந்து மிக முக்கியமான படிப்பினைகisg; பலர் கற்க மறந்து விட்டனர். சண்டை முடிந்தவுடன் காசாவில் யாரிடம் பாதுகாப்பை வழங்கப் போகிறார்கள் என்பது இஸ்ரேலிடம் உள்ள மிகப் பெரும் கேள்வியாகும்.

குறைந்தது 1,400 பேரைக் கொன்று, ஆயிரக் கணக்கானவர்களைக் காயப் படுத்தி, குழந்தைகள் மற்றும் முதிய வர்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகளைக் கைப்பற்றிய ஹமாஸ் இஸ்ரேலில் அதன் தாக்கு தல்களை நடத்திய பின் - இஸ்ரேல் உலக அழிவுப் போர்களை எதிரொ லிக்கும் வகையில் காஸாவில் ஒரு முழுமையான போரைக் கட்டவிழ்த் துள்ளது.

### காசா இராணுவ மயமாக்கல்

இப்போரில் பல மசூதிகள் இடிக்கப் பட்டன. சாலைகள் உடைந்தன. அகதி கள் மையங்கள் இடிந்து விழுந்தன. மருத்துவமனைகள் இருளில் மூழ்கி, போதிய தண்ணீர் கிடைக்காமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர்.

இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் பாலஸ்தீன சிவிலியன் இலக்குகள் மீது அதிக பலத்துடன் தாக்குவதால், ஆயிரக் கணக்கான அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

காசாவில் மிஞ்சியுள்ள ஒவ்வொரு ஹமாஸ் போராளிகளையும் அழித்து வரும் நிலையில், இஸ்ரேலின் விமானப் படை அந்த பகுதிக்கு எதிராக இடைவிடாத குண்டுவீச்சை நடாத்து கிறது.

ஹமாஸை முழுவதுமாக அழிப் பதே அவர்களின் நோக்கம் என்பதில் இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் தெளிவாக உள்ளனர். ஆயினும் அதன் பின்னர் காசாவை யார் வழிநடத்து வார்கள் என்பது எவருக்கும் தெளி வாகத் தெரியவில்லை.

அண்மையில் பிரதமர் நெதன்யாகு தன் ஆலோசகர்கள் மத்தியில் பேசு

(14ஆம் பக்கம் பார்க்க)




# காசா போரில் இஸ்ரேலின் படிப்பினை; ஆப்கானில் அமெரிக்க கற்ற பாடம்!

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையில் இஸ்ரேலிய துருப்புக்கள் ஹமாசை அழித்து, குறைந்தபட்சம் இராணுவமயமாக்கப்படும் வரை காசாவில் இருக்கும் என்று பரிந்துரைத்தார். இந்த செயல்முறை பல மாதங்கள் ஆகலாம் என்பதுடன், பாலஸ்தீன பொது மக்களால் ஆரம்பிக்கப்படும் கிளர்ச்சியை அவர்கள் எதிர்கொள்ளவும் கூடும்.

இஸ்ரேல் எவ்வளவு காலத்Jf;Ff; காசாப் பகுதியை மீண்டும் ஆக்கிரமிக்கும் அல்லது இறுதியில் அவர்கள் அதை அமைதி காக்கும் படை அல்லது வேறு அதிகாரத்திற்கு மாற்றுவார்களா என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.

### ஈராக் -ஆப்கான் - அமெரிக்க போர் படிப்பினைகள்

இஸ்ரேல் படைகள்( IDF) தனது ஹமாஸ் போரில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் போர்களில் இருந்து படிப்பினைகளை எடுத்துக்கொள்கிறதா என்பது குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.

2003இல் ஈராக்கை ஆக்கிரமிப்பதன் விளைவுகள் குறித்து அமெரிக்க வெளி யுறவுத்துறை செயலர் கொலின் பவல் ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷை தனிப்பட்ட முறையில் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போரில் தெளிவற்ற வழிகாட்டலால் இஸ்ரேலுக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. ஏனெனில் போரின் இலக்குகள் என்ன என்பதை அவர்களால் வெளிப்படுத்த முடியவில்லை.

2005 இல் காசாவில் இருந்து இஸ்ரேல் வெளியேறியதில் இருந்து, இது வரை நான்கு பெரிய மோதல்களைக் கொண்டுள்ளது: 2008, 2014, 2021 மீண்டும் இப்போது 2023. உண்மையில் ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காசாவை நோக்கிய இஸ்ரேலின் மூலோபாயம் “புல் வெட்டுதல்” (lawn mowing) என்று இராணுவ வல்லுநர்களால் விவரிக்கப்படுகிறது.

புவியியல் காரணங்களால் இஸ்ரேலியர்கள் உண்மையில் காசாவில் தொடர்ந்து நிலைத்து நிற்க முடியாது என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### ஹமாஸுடனான நவீன நகர்ப்புற போர்கள்

ஹமாஸுடனான இஸ்ரேலின் போர் இன்னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளது. ஆனால் நவீன நகர்ப்புற போர்கள் காசாவில் பாரிய அளவில் ஆரம்பிக்கப்படவில்லை.

2014 இல் இஸ்லாமிய அரசை (ISIS) வேரோடு பிடுங்குவதற்கான அதன் போராட்டத்தில் ஈராக் அரச கூட்டணியால் ஈராக்கின் மொசூல் நகரின் நீண்ட ஒன்பது மாத முற்றுகை போரில் 11,000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர்.

2004 இல் ஈராக்கின் வலூஜாவில் (Fallujah Battle) இருந்து சதாமுக்கு ஆதரவான சுனி கிளர்ச்சியாளர்களை அழிக்க அமெரிக்கா இராணுவம் ஆறு வாரங்களில் சுமார் 2800 பொது மக்க ளைக் கொன்றது.

இதற்கு நேர்மாறாக, ஒரு மாத காலத்Jf;குள், காசாவில் போர் ஏற்கனவே 14 800 பேரின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. அவர்களில் 41% பேர் குழந்தைகள் என்று காசாவில் உள்ள சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த இறப்புகளில் பெரும்பாலானவை இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களால் நிகழ்கின்றன. மேலும் நூறாயிரக் கணக்கான பொதுமக்கள் வசிப்பதாக நம்பப்படும் காசா நகரில் 30,000 ஹமாஸ் போராளிகளைj; தாக்குவதற்கு இஸ்ரேலிய துருப்புக்கள் நகரும் போது இறப்பு எண்ணிக்கை நிச்சயமாக ஏறும்.

### விருப்பமான போர் அல்ல

இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் என்பது இஸ்ரேலுக்கு விருப்பமான போர் அல்ல எனவும் கூறப்படுகிறது. ஒக்ரோபர் 7 தாக்குதல்களைத் தடுக்க, காசா மீதான ஹமாஸின் கட்டுப்பாட்டை ஒடுக்க இஸ்ரேலியர்கள் ஒருவித நடவடிக்கை எடுப்பது அவசியமானது என்றும், இஸ்ரேலியத் தலைவர்கள் தங்கள் ஹமாஸ் சண்டையை இரண்டாம் உலகப் போருடன் நேரடியாக ஒப்பிட்டுள்ளனர். பிரதமர் நெதன்யாகு ஒக்ரோபர் 7 பயங்கரவாத தாக்குதல்களை 1941 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போருக்குள் அமெரிக்காவை இழுத்த பேர்ல் ஹார்பர் குண்டுவெடிப்புடன் ஒப்பிட்டுள்ளார்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானுடன் அமெரிக்கா எதிர்கொள்ளாத புவியியல் சவால்களை காசாவில் இஸ்ரேல் எதிர்கொள்கிறது. இறுதியில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறியது அறிந்ததே.

ஒக்ரோபர் மாதத்தின் பிற்பகுதியில் பிரதமர் நெதன்யாகு ஆற்றிய உரையில், 1945 ஆம் ஆண்டு போரின் முடிவில் பிரிட்டிஷ் குண்டுவீச்சு நடவடிக்கையை அவர் சுட்டிக்காட்டினார். ஆங்கிலேய விமானப்படை திட்டமிட்ட இலக்கைத் தவறவிட்டு பள்ளியைத் தாக்கியது. ஹமாஸ் இலக்குகளுக்கு எதிரான தாக்குதல்களின் விளைவாக பொதுமக்கள் கொல்லப்பட்டால் அதை நியாயப்படுத்த நெதன்யாகு இரண்டாம்

உலகப் போரில் மேற்கத்திய இராணுவ நடவடிக்கைகளை ஒப்பிடுகிறார். அது போர்க்குற்றம் அல்ல என்றும் இஸ்ரேல் பிரதமர் வாதிடுகின்றார்.

இரண்டாம் உலகப் போரில் 45 மில்லியன் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதன் பின்னரே போர் பிராந்தியங்களில் பொது மக்களுக்கான பாதுகாப்புகளை நிவர்த்தி செய்ய ஐ.நாவால் புதிய ஜெனிவா கோட்பாட்டை உருவாக்க வழிவகுத்தது.

### பாலஸ்தீனர்கள் விரும்புவதை கொடுக்க வேண்டும்

ஒக்ரோபர் 7 தாக்குதலுக்குப் பிறகு ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வெற்றியடையலாம். இஸ்ரேல் இந்த முரண்பாடுகளை முறியடித்து, ஹமாஸை அழித்துg; போரின் நீண்ட கால வெற்றி என்பது அமைதியான எதிர்காலத்தை உருவாக்க விரும்பும் பாலஸ்தீனியர்களுக்கு அதிகாரம் அளிப்பதிலேயே தங்கி உள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கு அவர்கள் விரும்புவதைக் கொடுக்க இஸ்ரேல் தயாராக இருக்க வேண்டும். நிச்சயமாக இஸ்ரேலின் இருப்பு என்பது, மேற்குக் கரையிலும் காசாவிலும் ஒரு நட்புள்ள அரசை உருவாக்க வேண்டும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது சாத்தியமா எனும் கேள்விகளுக்கு அப்பால், இஸ்ரேலியர்கள் ஆக குறைந்தளவு அதிகாரத்தை பாலஸ்தீனியர்களுக்கு கொடுக்காவிடின், எதிர்காலத்தில் இது போன்ற போரும், வன்முறைகளும் தொடர்ந்து நிகழ்வதற்கான சாத்தியங்கள் அதிகமாகும்.








# சாய்ந்தமருதில் மாணவர் நாடாளுமன்றம்

கல்வி அமைச்சின் சுற்று நிரூபத்துக்கு அமைய இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள் என்கிற மகுட வாக்கியத்துடன் கல்முனை கல்வி வலய மாணவர் நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று புதன் கிழமை காலை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

# ‘மிக்ஜாம்’ புயல் நாளை மறுநாள் சென்னைக்கு அருகில் தாக்கும்?

வங்கக்கடலில் அந்தமான் அருகில் உருவாகியுள்ள காற்றழுத்த பகுதி, நாளை மறுநாள் புயலாக உரு வெடுக்கிறது. 'மிக்ஜாம்' என பெயரிடப் படும் இப்புயல், இம்முறை சென்னைக்கு அருகில் கரையைக் கடக்கலாம் என்றும், கல்பாக்கம் தொடங்கி வேதாரண்யம் வரையிலான கடலோர பகுதிகளில், அதன் தாக்கம் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் ஐந்து நாள்களுக்கு தொடர் கன மழை பெய்யும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.



வடகிழக்கு பருவ மழை கடந்த இரண்டு வாரங்களாக, தமிழகத்தில் தீவிரமாக பெய்து வருகிறது. கன்னியாகுமரி முதல், சென்னை வரை, பெரும்பாலான மாவட்டங்களில் மழை பரவலாக பெய்து வருகிறது.

### கீழடுக்கு சுழற்சி

இந்நிலையில், வங்கக்கடலில் புதிய புயல் சின்னம் உருவாகியுள்ளது. இது தமிழகம், புதுச்சேரி, ஆந்திர மாநிலங்களில், சூறாவளி காற்று மற்றும் மழையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பாலச்சந்திரன் அளித்த தகவல்கள் வருமாறு:-

தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று, தெற்கு அந்தமான் பகுதியில் நிலவுகிறது.

இந்த பகுதி, இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும். பின், டிசம்பர் 2 ஆம் திகதி புயலாக உருவெடுக்கும்.அதன் நகர்வு, உன்னிப்பாக கண்காணிக்கப்படுகிறது. தற்போதைய சூழலில், மூன்று வகைகளில், புயலின் அடுத்த கட்ட நகர்வுகள் உள்ளன. இரண்டு நாள்களில், அதன் சரியான நகர்வு தெரிவிக்கப்படும்.

இலங்கையின் வடக்கு மற்றும் அதையொட்டிய பகுதிகளில், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனால், தமிழகம், புதுச்சேரியில் பல மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னையில் இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில், மிதமான மழை பெய்யும். அதிகபட்சமாக, 29 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலை பதிவாகும்.

வங்கக் கடலின் தெற்கு, தென் மேற்கு, மத்திய பகுதிகளில், மணிக்கு 80 கி.மீ., வேகத்தில் சூறாவளி காற்று வீசும். எனவே, மீனவர்கள் வரும் 3 ஆம் திகதி வரை, இந்த பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

'மிக்ஜாம்' என பெயரிடப்பட உள்ள இந்த புயல், சென்னைக்கு அருகில் அல்லது வேதாரண்யம் முதல் கல்பாக்கம் வரையிலான கடலோரப் பகுதிகளில் கரை கடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால், நாகை, கடலூர், புதுச்சேரி மட்டுமின்றி, ஆந்திராவில் மசூலிப்பட்டினம், விசாகப்பட்டினம் வரை உள்ள கடலோரம் மற்றும் அதையொட்டிய மாவட்டங்களில் பெரும் தாக்கம் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முதல் தமிழகம், புதுச்சேரியில் தொடர் மழை பெய்து வருகிறது. இன்று முதல் ஐந்து நாட்களுக்கு கன மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

# திருப்பதிக் கூட்ட நெரிசலில் சிக்கி புது மணப்பெண் சாவு!

ஆந்திர மாநிலம் விஜயவாடாவைச் சேர்ந்தவர் லட்சுமி சாய் சந்தோஷ் (வயது 21). இவருக்கும் ஐதராபாத்தை சேர்ந்த பார்கவ் என்பவருக்கும் கடந்த 23 ஆம் திகதி திருமணம் நடந்தது.

இந்நிலையில் 27-ஆம் திகதி லட்சுமி சாய் சந்தோஷ் தனது கணவர் மற்றும் குடும்பத்தினருடன் ஏழுமலையானை தரிசிக்க வந்தனர்.





நேற்று முன்தினம் மாலை வரிசையில் சென்றனர். அப்போது கூட்டம் அதிகமாக இருந்தது. ஏழுமலையானை தரிசித்து விட்டு தங்கம் மண்டபம் அருகே புதுமணப் பெண் நடந்து வந்து கொண்டு இருந்தார். அப்போது திடீரென மயங்கி கீழே விழுந்தார்.

இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அவரது குடும்பத்தினர் மற்றும் விஜிலென்ஸ் அதிகாரிகள் அவரை அம்புலன்ஸ் மூலம் திருப்பதியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் லட்சுமி சாய் சந்தோஷ் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித்தனர்.

அவருக்கு சிறு வயது முதலே சுவாசக் கோளாறு இருந்ததாகவும், கூட்ட நெரிசலில் தரிசனத்திற்கு வந்ததால் மயங்கி விழுந்து இறந்தார் எனவும் லட்சுமி சாயின் பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இதையடுத்து அவர் பிணத்தை அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் புது மணப்பெண் அணிந்து இருந்த தங்க நகைகள் காணாமல் போயின என அவரது பெற்றோர் பொலிஸில் புகார் செய்தனர்.

பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# பணயக் கைதிகள் விடுவிப்புக்காக யுத்த நிறுத்தம் நீடிக்கும் அறிகுறி!

## ஒவ்வொரு நாள் போர் நிறுத்தத்துக்கும் 10 கைதிகளை விடுதலை

இஸ்ரேலில் இருந்து ஹமாஸ் படையினர் கடத்தி வைத்திருந்த 97 பிணைக் கைதிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 7-ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய ஹமாஸ் படையினர் பெண்கள், குழந்தைகள் உள்பட 240-க்கும் அதிகமானோரைக் கடத்திச் சென்றனர்.

அவர்களை மீட்கவும், ஹமாஸை அழிக்கவும் இஸ்ரேல் படையினர் காஸா நகரின் மீது ஒரு மாதத்துக்கும் மேல் பயங்கரத் தாக்குதல் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து, கத்தார் நாட்டின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், 50 பிணைக் கைதிகளை விடுவிக்க 4 நாள்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேலுக்கும் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, கடந்த புதன்கிழமை முதல் 4 நாள்களுக்கு 50 பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தொடர்ந்து, கூடுதலாக ஒவ்வொரு நாள் போர் நிறுத்துவதற்கு 10 பிணைக் கைதிகள் விடுவிக்க வேண்டும் என்று இஸ்ரேல் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை வரை 81 பிணைக் கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவித்திருந்தனர்.

இந்த நிலையில், புதன்கிழமை நள்ளிரவு இஸ்ரேல் நாட்டின் பெண்கள், குழந்தைகள் 10 பேர், தாய்லாந்தின் 4 பேர், ரஷியாவின் 2 பேர் என மொத்தம் 16 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது.

இதனைத் தொடர்ந்து, இஸ்ரேல் சிறைகளில் உள்ள 30 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் அரசு வியாழக்கிழமை அதிகாலை விடுதலை செய்துள்ளது.

மேலும் சில நாள்கள் போர் நிறுத்தத்தை நீடித்து பிணைக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க இஸ்ரேல் அரசு முனைப்புக் காட்டி வருகின்றது.

# ஊழல் வழக்குகளில் இருந்து நவாஸ் ஷெரீப்புக்கு விடுதலை

## தேர்தல் நடக்கவிருக்கையில் தீர்ப்பு

பாகிஸ்தானில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் (வயது 73) ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

மூன்று முறை பிரதமராக இருந்தவர் நவாஸ் ஷெரீப். இவர் மீது தோஷகானா ஊழல் உட்பட பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதில் தோஷகானா ஊழல் வழக்கில் இவருக்கு சிறைதண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து 2020 ஆம் ஆண்டு அவரது சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.



இதற்கிடையே அவரது உடல்நிலை மோசமானதால் சிகிச்சைக்காக 2019 ஆம் ஆண்டு அவர் லண்டன் சென்றிருந்தார். பின்னர் அங்கேயே தலைமறைவான அவர், ஆட்சி மாற்றத்தை அடுத்து கடந்த மாதம் 21 ஆம் திகதி நாடு திரும்பினார். முன்னதாக அவர் மீது பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டையும் நீதிமன்றம் நிறுத்தி வைத்தது. சமீபத்தில் இஸ்லாமாபாத்தில் உள்ள மேல் நீதிமன்றத்தில் நவாஸ் ஷெரீப் ஆஜராகினார். நீதிமன்றில் அவர் ஆஜரானதால் தோஷகானா வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட அவரது அனைத்து சொத்துக்களையும் திரும்ப ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் அவென்ஃபீல்ட் எனும் ஊழல் வழக்கிலிருந்து பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபை இஸ்லாபாத் உயர்நீதிமன்றம் நேற்று விடுவித்தது. இந்த தீர்ப்பை அமீர் ஃபருக், மியான்குல் ஹஸன் ஔரங்கசீப் நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கியுள்ளது. பாகிஸ்தானின் 12-ஆவது, 14-ஆவது மற்றும் 20-ஆவது பிரதமராக பதவி வகித்து வந்த நவாஸ் ஷெரீஃப் (73), பனாமா ஆவண முறைகேடு தொடர்பாக உச்சநீதிமன்றத்தால் கடந்த 2017-ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். பாகிஸ்தானில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டியில் கட்டாக்காலிகள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டியில் கட்டாக்காலிகள் தொடர்பில் கற்பிட்டி பிரதேச சபை மற்றும் பொலிஸார் இணைந்து வழங்கப்பட்ட அறிவித்தலை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் , புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த சில மாதங்களாக பெய்த கடும் மழை காரணமாக, கற்பிட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பல தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளது.

சிறிய மழை பெய்தாலும் கூட கற்பிட்டி நகரம் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கிவிடும்.

இந்த நிலையில், கற்பிட்டி பகுதிகளில் உள்ள ஆடுகள் , மாடுகள் மற்றும் கழுதைகள் என்பன வெள்ளம் காரணமாக தமது பட்டிகளில் இருந்து வெளியேறி பகல், இரவு நேரங்களில் நடுவீதிகள், பஸ் தரிப்பிடங்களில் படுத்துறங்குவதை காணக்கூடியதாக உள்ளது.



குறித்த ஆடுகள், மாடுகள் மற்றும் கழுதைகளும் இரவு நேரங்களில் தங்கி இருக்க கூடிய பட்டிகள் வெள்ளத்தால்மூழ்கியிருப்பதால்தான் அவை வெளியேறி நீர் தேங்காத இடங்களுக்குச் சென்று தரித்து நிற்பதை அறியக் கூடியதாக உள்ளது.


இந்த நிலையில், கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கற்பிட்டி பிரதேச சபை மற்றும் பொலிஸார் இணைந்து அறிவித்தல் வழங்கியுள்ளனர்.

இந்த திடீர் அறிவிப்பால் கால்நடை பராமரிப்பாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு சாதாரண காரணங்களும் உள்ளன.

எனவே, கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த பாதுகாப்பு தரப்பினர் எடுக்கும் முயற்சிகளுக்கு எமது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன், கற்பிட்டி பகுதியில் காலநடை பராமரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

கற்பிட்டி பகுதியில் தற்போது வெள்ளநீர் படிப்படியாக வழிந்தோடுவதால் நிலைமை வழமைக்கு திரும்பும் வரை கால்நடை பராமரிப்பாளர்களுக்கு இந்த விடயத்தில் கால அவகாசம் வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அதன் பின்பு கட்டாக்காலிகள் விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்பு தரப்பினர் எடுக்கும் முயற்சிகள் அனைத்துக்கும் நாங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் எனவும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.






# திருமலை ஆஸ்பத்திரிக்கு கண் வில்லைகள் வழங்கிய வன்னி ஹோப் நிறுவனத்தினர்

(ஹஸ்பர்)

ஆஸ்ரேலியாவை தலைமையகமாகக் கொண்டு இலங்கையில் பணிபுரியும் வன்னி ஹோப் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சை வில்லைகள் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (28) திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைத்து இவை வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கு இணங்க கண் சத்திர சிகிச்சை நோயாளர்களின் நலன் கருதி கண் வில்லைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம். பாரிஸால் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எல்.டபிள்யு. ஜயவிக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டன.

தற்போது நாட்டில் நிலவிவரும் பொருளாதார நிலமைகளைக் கருத்தில் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கண் நோயாளர்கள் கண் சத்திரசிகிச்சையின் போது தேவையான கண் வில்லைகளை தாங்களாகவே கொண்டுவரும் நடைமுறை இருந்து வந்தது.

கண் வில்லைகளைக் கொள்வனவு செய்வதில் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வந்ததுடன் வைத்தியசாலை நிர்வாகமும் பல இடர்பாடுகளையும் சந்தித்தது. இந்த நிலமைகளை கருத்தில் கொண்டு அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்த உதவியை வன்னி ஹோப் நிறுவனம் இரு தடவைகள் வழங்கியது. திருமலை மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகம் வன்னி ஹோப் நிறு வனத்துக்கும் அதன் கொடையாளர்க ளுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளது.



# மஹிந்த, ஜோன்ஸ்டன் பயணித்த ஜீப் மீது அதிவேக வீதியில் தடுப்பு வீழ்ந்ததில் சேதம்

## பொலிஸார் தீவிர விசாரணை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் பயணித்த ஜீப் மத்திய அதிவேக வீதியில் குருநாகல் – யக்கஹபிட்டிய பாதையிலிருந்து வெளியேறும் போது, கட்டணம் செலுத்தும் கருமபீடத்துக்கு அருகில் காணப்படும் தடுப்பு வீழ்ந்ததில் அவர்கள் பயணித்த ஜீப் சேதமடைந்தமை தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்தச் சொகுசு ஜீப்பின் முன்பக்க கண்ணாடியும் வாகனத்தின் ஒரு பகுதியும் சேதமடைந்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் அநுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் – யக்கஹபிட்டிய பாதையிலிருந்து வெளியேறிச் செல்ல முயன்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயணித்த ஜீப் ஆகியவை வெளியேறும் வாயிலைக் கடந்தவுடன், கட்டணம் செலுத்தும் கருமபீடத்துக்கு அருகிலுள்ள தடுப்பை அங்கிருந்த ஊழியர்கள் இறக்கியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதி வழங்கல்!

(அபு அலா )

இலங்கை பத்திரிகையாளர் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நாடளாவிய ரீதியிலுள்ள ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியை இலங்கை பத்திரிகையாளர் பேரவை வழங்கத் தீர்மானித்துள்ளது என்று அதன் உதவிப் பத்திரிகை ஆணையாளர் தில்ஹானி விஜேரத்ன தெரிவித்தார்.

தரமான ஊடக கலாச்சாரத்தை உருவாக்கி ஊடகவியலாளர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களின் ஊடகப் பணியை முன்னெடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்குச் சலுகை முறையில் இந்தப்பொதிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பொதியைப் பெற்றுக் கொள்ளும் ஊடகவியலாளர்களுக்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 09 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 58 இல் அமைந்துள்ள வங்கி கற்கைகளுக்கான நிலையத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தப் பொதிகளைப் பெற்றுக்கொள்ள வரும் ஊடகவியலாளர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஊடக அடையாள அட்டை அல்லது

ஊடக நிறுவனத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் இப்பொதியை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை பத்திரிகையாளர் பேரவையால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஆகியன கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்குரிய பொதிகளை அவர்களே முன்வந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்வரும் மாதம் 06 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் வரவை உறுதிப்படுத்துவதற்கு

011-2693271 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டைக்கு தென் ஆபிரிக்க தூதர் விஜயம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பின் புராதனச் சின்னமாகத் திகழும் 400 வருடங்ககள் பழைமை வாய்ந்த ஒல்லாந்தர் கோட்டைக்கு தென் ஆபிரிக்காவின் தூதர் செவ்வாய்க்கிழமை விஜயம் செய்துள்ளார்.

இதன்போது தென் ஆபிரிக்காவுக்கான தூதர் சாண்டிலே எட்வின் ஷால்க்குடன் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணியகத்தின் தவிசாளர் ஏ. பீ.மதனவாசன் மற்றும் தூதரின் செயலாளர் உள்ளிட்டோர் வருகை தந்திருந்தனர்.

இக்குழுவினர் மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோட்டை வளாகத்தை பார்வையிட்டதுடன், மாவட்டத்தின் வளங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்தனர்.




# சர்வதேச மனக்கணிதப் போட்டிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 19 பேர்!

சர்வதேச மனக்கணித போட்டியின் 2023ஆம் ஆண்டுக்கான போட்டிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 19 மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறவுள்ள போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 59 மாணவர்கள் பங்கேற்கவுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து 19 மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் போட்டியில் 80 ,ற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியில் மாணவர்கள் பங்கேற்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து , போட்டிக்கு அனுப்பி வைத்துள்ள UCMAS இன் திருநெல்வேலி கிளையினர் தெரிவிக்கையில்,

எமது பயிற்றுவிப்பாளர்களின் மாதக்கணக்கான அர்ப்பணிப்பும், பல வருட அனுபவமுமே இந்த இளையவர்களின் திறமைகளை இந்த அரங்குக்கு கொண்டு வந்துள்ளது.

மேலும் அவர்கள் இலங்கையைப் பெருமைப்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிக் கிளையின் 17 வருட சாதனைப் பயணம் புத்தாக்கம் மிக்க மாணவர்களை உருவாக்குவதில் பாரிய வெற்றி கண்டிருப்பதைத் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளின் மூலமாகக் கண்டு கொள்ள முடியும்.

ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டி வெற்றிகளில் யாழ். திருநெல்வேலி UCMAS கிளை முன்னணி வகிக்கின்றது.

80 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்குபற்றும் இந்த சர்வதேசப் போட்டியில் யாழ். மண்ணின் இளையவர்கள் வெற்றி வாகை சூடி எம் நாட்டுக்கும் எம் மண்ணுக்கும் பெருமை சேர்க்க வாழ்த்துகின்றோம் என தெரிவித்தனர்.





# அரச பங்களிப்புடன் திருத்தப்பட்ட வீடு காரைதீவில் கையளிப்பு!

(நூருல் ஹுதா உமர் )

காரைதீவு பிரதேச செயலர் பிரிவின் மாவடிப்பள்ளி மேற்கு பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டுக்காக நடைமுறைப்படுத்தும் 2லட்சத்து 50ஆயிரம் ருபா பெறுமதியான அரச பங்களிப்புடன் புனர்நிர்மானம் செய்யப்பட்ட வீடு பயனாளியிடத்தில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் கலந்து கொண்டார். விசேட அதிதியாக காரைதீவு உதவிப் பிரதேச செயலர் எஸ். பார்த்திபன், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாவடிப்பள்ளி பள்ளிவாசல் தலைவர் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.